ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



# ஆழ்வாராசார்யர்கள் அருளிச் செய்த
# திருவேங்கடத் தமிழ் மாலை



**First Edition: 2009**

Copyright © 2001-2009
All Rights Reserved

## திருவேங்கடத் தமிழ் மாலை

பெரியாழ்வார் திருமொழி ..... 5
பெரியாழ்வார் திருமொழி 1-4-3 ..... 5
பெரியாழ்வார் திருமொழி 1-8-8 ..... 5
பெரியாழ்வார் திருமொழி 2-6-9 ..... 5
பெரியாழ்வார் திருமொழி 2-7-3 ..... 5
பெரியாழ்வார் திருமொழி 2-9-6 ..... 5
பெரியாழ்வார் திருமொழி 3-3-4 ..... 6
பெரியாழ்வார் திருமொழி 5-4-1 ..... 6
திருப்பாவை ..... 6
திருப்பாவை தனியன் ..... 6
நாச்சியார் திருமொழி ..... 6
நாச்சியார் திருமொழி 1-1 ..... 6
நாச்சியார் திருமொழி 1-3 ..... 6
நாச்சியார் திருமொழி 4-2 ..... 7
நாச்சியார் திருமொழி 5-2 ..... 7
நாச்சியார் திருமொழி 8 ..... 7
நாச்சியார் திருமொழி 10-5 ..... 8
நாச்சியார் திருமொழி 10-8 ..... 9
பெருமாள் திருமொழி ..... 9
பெருமாள் திருமொழி 4 ..... 9
திருச்சந்த விருத்தம் ..... 10
திருச்சந்த விருத்தம் 48 ..... 10
திருச்சந்த விருத்தம் 60 ..... 11
திருச்சந்த விருத்தம் 81 ..... 11
அமலனாதி பிரான் ..... 11
அமலனாதி பிரான் 1 ..... 11
அமலனாதி பிரான் 3 ..... 11
பெரிய திருமொழி ..... 11
பெரிய திருமொழி 1-8 ..... 11
பெரிய திருமொழி 1-9 ..... 13
பெரிய திருமொழி 1-10 ..... 14
பெரிய திருமொழி 2-1 ..... 15
பெரிய திருமொழி 4-3-8 ..... 17
பெரிய திருமொழி 4-7-5 ..... 17
பெரிய திருமொழி 5-3-4 ..... 17
பெரிய திருமொழி 5-5-1 ..... 17
பெரிய திருமொழி 5-6-7 ..... 17
பெரிய திருமொழி 6-8-1 ..... 18
பெரிய திருமொழி 7-3-5 ..... 18
பெரிய திருமொழி 7-10-3 ..... 18
பெரிய திருமொழி 8-2-3 ..... 18
பெரிய திருமொழி 9-7-4 ..... 18
பெரிய திருமொழி 9-9-9 ..... 18
பெரிய திருமொழி 10-1-2 ..... 19
பெரிய திருமொழி 10-10-5 ..... 19
பெரிய திருமொழி 11-3-7 ..... 19
பெரிய திருமொழி 11-5-10 ..... 19

திருக்குறுந்தாண்டகம் ........ 19
திருக்குறுந்தாண்டகம் 7 ........ 19
திருநெடுந்தாண்டகம் ........ 19
திருநெடுந்தாண்டகம் 8 ........ 19
திருநெடுந்தாண்டகம் 9 ........ 20
திருநெடுந்தாண்டகம் 16 ........ 20
முதல் திருவந்தாதி ........ 20
முதல் திருவந்தாதி 26 ........ 20
முதல் திருவந்தாதி 37 ........ 20
முதல் திருவந்தாதி 38 ........ 21
முதல் திருவந்தாதி 39 ........ 21
முதல் திருவந்தாதி 40 ........ 21
முதல் திருவந்தாதி 68 ........ 21
முதல் திருவந்தாதி 76 ........ 21
முதல் திருவந்தாதி 77 ........ 21
முதல் திருவந்தாதி 82 ........ 22
முதல் திருவந்தாதி 99 ........ 22
இரண்டாம் திருவந்தாதி ........ 22
இரண்டாம் திருவந்தாதி 25 ........ 22
இரண்டாம் திருவந்தாதி 28 ........ 22
இரண்டாம் திருவந்தாதி 33 ........ 22
இரண்டாம் திருவந்தாதி 45 ........ 22
இரண்டாம் திருவந்தாதி 46 ........ 22
இரண்டாம் திருவந்தாதி 53 ........ 23
இரண்டாம் திருவந்தாதி 54 ........ 23
இரண்டாம் திருவந்தாதி 72 ........ 23
இரண்டாம் திருவந்தாதி 75 ........ 23
மூன்றாம் திருவந்தாதி ........ 23
மூன்றாம் திருவந்தாதி 14 ........ 23
மூன்றாம் திருவந்தாதி 26 ........ 23
மூன்றாம் திருவந்தாதி 30 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 32 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 39 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 40 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 45 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 58 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 61 ........ 24
மூன்றாம் திருவந்தாதி 62 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 63 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 68 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 69 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 70 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 71 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 72 ........ 25
மூன்றாம் திருவந்தாதி 73 ........ 26
மூன்றாம் திருவந்தாதி 75 ........ 26
மூன்றாம் திருவந்தாதி 89 ........ 26
நான்முகன் திருவந்தாதி ........ 26

நான்முகன் திருவந்தாதி 34 ........ 26
நான்முகன் திருவந்தாதி 39 ........ 26
நான்முகன் திருவந்தாதி 40 ........ 26
நான்முகன் திருவந்தாதி 41 ........ 27
நான்முகன் திருவந்தாதி 42 ........ 27
நான்முகன் திருவந்தாதி 43 ........ 27
நான்முகன் திருவந்தாதி 44 ........ 27
நான்முகன் திருவந்தாதி 45 ........ 27
நான்முகன் திருவந்தாதி 46 ........ 27
நான்முகன் திருவந்தாதி 47 ........ 27
நான்முகன் திருவந்தாதி 48 ........ 28
நான்முகன் திருவந்தாதி 90 ........ 28
திருவிருத்தம் ........ 28
திருவிருத்தம் 8 ........ 28
திருவிருத்தம் 10 ........ 28
திருவிருத்தம் 15 ........ 28
திருவிருத்தம் 31 ........ 28
திருவிருத்தம் 50 ........ 28
திருவிருத்தம் 60 ........ 29
திருவிருத்தம் 67 ........ 29
திருவிருத்தம் 81 ........ 29
சிறிய திருமடல் ........ 29
சிறிய திருமடல் 69 ........ 29
பெரிய திருமடல் ........ 29
பெரிய திருமடல் 6 ........ 29
பெரிய திருமடல் 124 ........ 29
திருவாய்மொழி ........ 30
திருவாய்மொழி 1-8-3 ........ 30
திருவாய்மொழி 2-6-9 ........ 30
திருவாய்மொழி 2-6-10 ........ 30
திருவாய்மொழி 2-7-11 ........ 30
திருவாய்மொழி 3-3 ........ 30
திருவாய்மொழி 3-5-8 ........ 32
திருவாய்மொழி 3-9-1 ........ 32
திருவாய்மொழி 4-5-11 ........ 32
திருவாய்மொழி 6-6 ........ 32
திருவாய்மொழி 6-10 ........ 34
திருவாய்மொழி 8-2-1 ........ 35
திருவாய்மொழி 9-3-8 ........ 35
திருவாய்மொழி 10-5-6 ........ 35
திருவாய்மொழி 10-7-8 ........ 35
இராமானுச நூற்றந்தாதி ........ 36
இராமானுச நூற்றந்தாதி 76 ........ 36
இராமானுச நூற்றந்தாதி 106 ........ 36
திருவாய்மொழி நூற்றந்தாதி ........ 36
திருவாய்மொழி நூற்றந்தாதி 23 ........ 36
திருவாய்மொழி நூற்றந்தாதி 60 ........ 36

## ஆழ்வாராசார்யர்கள் அருளிச் செய்த
# திருவேங்கடத் தமிழ் மாலை

---

## பெரியாழ்வார் அருளிச் செய்த
## பெரியாழ்வார் திருமொழி

### பெரியாழ்வார் திருமொழி 1-4-3

56 சுற்றும் ஒளி வட்டம் * சூழ்ந்து சோதி பரந்தெங்கும் *
எத்தனை செய்யிலும்[1] * என் மகன் முகம் நேர் ஒவ்வாய் **
வித்தகன் வேங்கடவாணன் * உன்னை விளிக்கின்ற *
கைத்தலம் நோவாமே * அம்புலீ! கடிதோடி வா

### பெரியாழ்வார் திருமொழி 1-8-8

104 என்னிது மாயம்? * என் அப்பன் அறிந்திலன் *
முன்னைய வண்ணமே கொண்டு * அளவாய் என்ன **
மன்னு நமுசியை * வானில் சுழற்றிய *
மின்னு முடியனே! அச்சோவச்சோ * வேங்கடவாணனே! அச்சோவச்சோ

### பெரியாழ்வார் திருமொழி 2-6-9

180 தென்னிலங்கை மன்னன் * சிரம் தோள் துணி செய்து *
மின்னிலங்கு பூண் * விபீடண நம்பிக்கு **
என்னிலங்கு நாமத்தளவும் * அரசு என்ற *
மின்னலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா * வேங்கடவாணற்கு ஓர்
கோல் கொண்டு வா

### பெரியாழ்வார் திருமொழி 2-7-3

184 மச்சொடு மாளிகை ஏறி * மாதர்கள் தம்மிடம் புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்து * காம்புதுகில் அவை கீறி **
நிச்சலும் தீமைகள் செய்வாய்! * நீள் திருவேங்கடத்து எந்தாய்! *
பச்சைத் தமனகத்தோடு * பாதிரிப் பூச்சூட்ட வாராய்

### பெரியாழ்வார் திருமொழி 2-9-6

207 போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய் *
போதரேன் என்னாதே போதர் கண்டாய் *
ஏதேனும் சொல்லி அசலகத்தார் *
ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன் **
கோதுகலமுடைக்[2] குட்டனேயோ! *
குன்றெடுத்தாய்! குடமாடு கூத்தா! *
வேதப் பொருளே! என் வேங்கடவா! *

---

[1] செய்யினும்

[2] கோதுகுலமுடை

வித்தகனே! இங்கே போதராயே

### பெரியாழ்வார் திருமொழி 3-3-4

247 கடியார் பொழிலணி வேங்கடவா!* கரும் போரேறே! * நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் * கொள்ளாதே போனாய் மாலே! **
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன* சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி * உன் கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய் * நீ எம்பிரான்!

### பெரியாழ்வார் திருமொழி 5-4-1

463 * சென்னியோங்கு * தண் திருவேங்கடம் உடையாய்! * உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ! * தாமோதரா! சதிரா! **
என்னையும் என் உடைமையையும் * உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு *
நின் அருளே புரிந்திருந்தேன் * இனி என் திருக்குறிப்பே?

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## திருப்பாவை

### திருப்பாவை தனியன்

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! * தொல்பாவை
பாடி அருள வல்ல பல்வளையாய்! * - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாம் கடவா வண்ணமே நல்கு

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

### நாச்சியார் திருமொழி 1-1

504 * தையொரு திங்களும் தரை விளக்கித் *
தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா! **
உய்யவுமாங்கொலோ என்று சொல்லி *
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை *
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே

### நாச்சியார் திருமொழி 1-3

506 மத்தநன் நறுமலர் முருக்கமலர்

கொண்டு * முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவமிலி என்று நெஞ்செரிந்து *
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே **
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி *
வித்தகன் வேங்கடவாணன் என்னும் *
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே

### நாச்சியார் திருமொழி 4-2

535 * காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர் *
வாட்டம் இன்றி * மகிழ்ந்துறை வாமனன் **
ஓட்டரா வந்து * என் கைப் பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே!

### நாச்சியார் திருமொழி 5-2

546 வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட *
விமலன் எனக்கு உருக்காட்டான் *
உள்ளம் புகுந்து என்னை நைவித்து * நாளும்
உயிர்ப்பெய்து[3] கூத்தாட்டுக் காணும் **
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் *
களித்திசை பாடும் குயிலே! *
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது * என்
வேங்கடவன் வரக் கூவாய்

### நாச்சியார் திருமொழி 8

577 * விண்ணீல மேலாப்பு * விரித்தாற் போல் மேகங்காள்! *
தெண்ணீர் பாய் வேங்கடத்து * என் திருமாலும் போந்தானே? **
கண்ணீர்கள் முலைக் குவட்டில் * துளி சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை ஈடழிக்கும் * இது தமக்கோர் பெருமையே

578 மாமுத்த நிதி சொரியும் * மாமுகில்காள்! * வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட * தாடாளன்[4] வார்த்தை என்னே! **
காமத் தீயுள் புகுந்து * கதுவப்பட்டு இடைக் கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு * இங்கு இலக்காய் நான் இருப்பேனே

579 ஒளிவண்ணம் வளை சிந்தை * உறக்கத்தோடு இவை எல்லாம் *
எளிமையால் இட்டு என்னை * ஈடழியப் போயினவால் **
குளிர் அருவி வேங்கடத்து * என் கோவிந்தன் குணம் பாடி *
அளியத்த மேகங்காள்! * ஆவி காத்து இருப்பேனே

---

[3] உயிர்பெய்து

[4] தாளாளன்

580 மின்னாகத்து எழுகின்ற * மேகங்காள்! * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை * தங்கிய சீர் மார்வர்க்கு **
என்னாகத்து இளங்கொங்கை * விரும்பித் தாம் நாள் தோறும் *
பொன்னாகம் புல்குதற்கு * என் புரிவுடைமை செப்புமினே

581 வான் கொண்டு கிளர்ந்து எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் * திரண்டேறிப் பொழிவீர்காள்! **
ஊன் கொண்ட வள்ளுகிரால் * இரணியனை உடல் இடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் * தருமாகில் சாற்றுமினே

582 சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த * தண் முகில்காள்! * மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே * நிரந்தேறிப் பொழிவீர்காள்! **
உலங்குண்ட விளங்கனி போல் * உள் மெலியப் புகுந்து * என்னை
நலங்கொண்ட நாரணற்கு[5] * என் நடலை நோய் செப்புமினே

583 * சங்கமா கடல் கடைந்தான் * தண் முகில்காள்! * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் * அடி வீழ்ச்சி விண்ணப்பம் **
கொங்கை மேல் குங்குமத்தின் * குழம்பழியப் புகுந்து * ஒரு நாள்
தங்குமேல் * என் ஆவி தங்கும் என்று உரையீரே

584 கார் காலத்து எழுகின்ற * கார் முகில்காள்! * வேங்கடத்துப்
போர் காலத்து எழுந்தருளிப் * பொருதவனார் பேர் சொல்லி **
நீர் காலத்து எருக்கி * நம் பழவிலை போல் வீழ்வேனை *
வார் காலத்து ஒரு நாள் * தம் வாசகம் தந்தருளாரே

585 * மத யானை போல் எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! * பாம்பணையான் வார்த்தை என்னே! **
கதி என்றும் தான் ஆவான் * கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் * வையகத்தார் மதியாரே

586 * நாகத்தின் அணையானை * நன்னுதலாள் நயந்துரை செய் *
மேகத்தை வேங்கடக் கோன் * விடு தூதில் விண்ணப்பம் **
போகத்தில் வழுவாத * புதுவையர் கோன் கோதை தமிழ் *
ஆகத்து வைத்துரைப்பார் * அவரடியார் ஆகுவரே

**நாச்சியார் திருமொழி 10-5**

601 பாடும் குயில்காள்! * ஈதென்ன பாடல்? * நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் * வந்து பாடுமின் **
ஆடும் கருளக் கொடி உடையார் * வந்து அருள் செய்து *
கூடுவர் ஆயிடில் * கூவி நும் பாட்டுகள் கேட்டுமே

[5] நாரணர்க்கு

### நாச்சியார் திருமொழி 10-8

604 * மழையே! மழையே! மண்புறம் பூசி * உள்ளாய் நின்ற
மெழுகு ஊற்றினாற் போல் * ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற **
அழகப் பிரானார் தம்மை * என் நெஞ்சத்து அகப்படத்
தழுவ நின்று * என்னைத் ததர்த்திக்[6] கொண்டு * ஊற்றவும் வல்லையே?

---

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

## பெருமாள் திருமொழி

### பெருமாள் திருமொழி 4

677 * ஊனேறு செல்வத்து * உடற்பிறவி யான் வேண்டேன் *
ஆனேறேழ் வென்றான் * அடிமைத் திறம் அல்லால் **
கூனேறு சங்கம் இடத்தான் தன் * வேங்கடத்து *
கோன் ஏரி வாழும் * குருகாய்ப் பிறப்பேனே

678 ஆனாத செல்வத்து * அரம்பையர்கள் தற்சூழ[7] *
வானாளும் செல்வமும் * மண்ணரசும் யான் வேண்டேன் *
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கடச் சுனையில் *
மீனாய்ப் பிறக்கும் * விதி உடையேன்[8] ஆவேனே

679 பின்னிட்ட சடையானும் * பிரமனும் இந்திரனும் *
துன்னிட்டுப் புகல் அரிய * வைகுந்த நீள் வாசல் **
மின்வட்டச் சுடர் ஆழி * வேங்கடக் கோன் தானுமிழும் *
பொன் வட்டில் பிடித்துடனே * புகப் பெறுவேன்[9] ஆவேனே

680 ஒண்பவள வேலை * உலவு தண் பாற்கடலுள் *
கண் துயிலும் மாயோன் * கழலிணைகள் காண்பதற்கு **
பண் பகரும் வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்து *
செண்பகமாய் நிற்கும் * திருவுடையேன்[10] ஆவேனே

681 கம்பமத யானை * கழுத்தகத்தின் மேல் இருந்து *
இன்பமரும் செல்வமும் * இவ்வரசும் யான் வேண்டேன் **
எம்பெருமான் ஈசன் * எழில் வேங்கட மலை மேல் *
தம்பகமாய்[11] நிற்கும் * தவம் உடையேன்[12] ஆவேனே

---

[6] ததைத்து
[7] அரம்பையர் கடற்சூழ
[8] உடையென்
[9] பெறுவென்
[10] திருவுடையென்
[11] தம்பமாய்
[12] உடையென்

682 மின்னனைய நுண்ணிடையார் * உருப்பசியும் மேனகையும் *
அன்னவர் தம் பாடலொடும் * ஆடல் அவை ஆதரியேன் **
தென்னவென வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்துள் *
அன்னனைய பொற்குவடாம் * அருந்தவத்தன்[13] ஆவேனே

683 வானாளும் மாமதி போல் * வெண்குடைக் கீழ் * மன்னவர் தம்
கோனாகி வீற்றிருந்து * கொண்டாடும் செல்வறியேன் **
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
கானாறாய்ப் பாயும் * கருத்துடையேன்[14] ஆவேனே

684 பிறை ஏறு சடையானும் * பிரமனும் இந்திரனும் *
முறையாய பெருவேள்விக் * குறை முடிப்பான் மறையானான் **
வெறியார் தண்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
நெறியாய்க் கிடக்கும் * நிலை உடையேன்[15] ஆவேனே

685 * செடியாய வல்வினைகள் * தீர்க்கும் திருமாலே! *
நெடியானே! வேங்கடவா! * நின் கோயிலின் வாசல்[16] **
அடியாரும் வானவரும் * அரம்பையரும் கிடந்து இயங்கும் *
படியாய்க் கிடந்து * உன் பவளவாய் காண்பேனே

686 உம்பர் உலகாண்டு * ஒரு குடைக் கீழ் * உருப்பசி தன்
அம்பொற்கலை அல்குல் * பெற்றாலும் ஆதரியேன் **
செம்பவள வாயான் * திருவேங்கடம் என்னும் *
எம்பெருமான் பொன்மலை மேல் * ஏதேனும் ஆவேனே

687 * மன்னிய தண்சாரல் * வடவேங்கடத்தான் தன் *
பொன்னியலும் சேவடிகள் * காண்பான் புரிந்து இறைஞ்சி **
கொன்னவிலும் கூர்வேல் * குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் தமிழ் வல்லார் * பாங்காய பத்தர்களே

---

## திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
## திருச்சந்த விருத்தம்

### திருச்சந்த விருத்தம் 48

799 குன்றில் நின்று வான் இருந்து * நீள் கடல் கிடந்து * மண்
ஒன்று சென்றதொன்றை உண்டு * அதொன்று இடந்து பன்றியாய் **

[13] அருந்தவத்தென்
[14] கருத்துடையென்
[15] உடையென்
[16] வாயில்

நன்று சென்ற நாள் அவற்றுள் * நல் உயிர் படைத்து அவர்க்கு *
அன்று தேவமைத்து அளித்த * ஆதி தேவன் அல்லையே?

### திருச்சந்த விருத்தம் 60

811 * செழும் கொழும் பெரும்பனி பொழிந்திட * உயர்ந்த வேய்
விழுந்து உலர்ந்து எழுந்து * விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று **
எழுந்திருந்து தேன் பொருந்து * பூம்பொழில் தழைக் கொழும் *
செழுந்தடம் குடந்தையுள் * கிடந்த மாலும் அல்லையே?

### திருச்சந்த விருத்தம் 81

832 கடைந்து பாற்கடல் கிடந்து * கால நேமியைக் கடிந்து[17] *
உடைந்த வாலி தன்தனக்கு[18] * உதவ வந்து இராமனாய் **
மிடைந்த ஏழ் மரங்களும் * அடங்க எய்து வேங்கடம் *
அடைந்த மால பாதமே * அடைந்து நாளும் உய்ம்மினோ

---

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
# அமலனாதி பிரான்

### அமலனாதி பிரான் 1

927 * அமலன் ஆதி பிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் * விண்ணவர் கோன் * விரையார் பொழில் வேங்கடவன் **
நிமலன் நின்மலன் நீதி வானவன் * நீள் மதிள் அரங்கத்தம்மான் * திருக்
கமல பாதம் வந்து * என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே[19]

### அமலனாதி பிரான் 3

929 * மந்தி பாய் * வட வேங்கட மாமலை * வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவினணையான் **
அந்தி போல் நிறத்தாடையும் * அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில் *
உந்தி மேலதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி

### பெரிய திருமொழி 1-8

1018 * கொங்கலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த * கோவலன் எம்பிரான் *

---

[17] கடந்து
[18] தன்பினுக்கு
[19] ஒக்கின்றவே

சங்கு தங்கு தடங்கடல் * துயில் கொண்ட தாமரைக் கண்ணினன் **
பொங்கு புள்ளினை வாய் பிளந்த * புராணர் தம்மிடம் * பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1019 * பள்ளியாவது பாற்கடல் அரங்கம் * இரங்கவன் பேய்முலை *
பிள்ளையாய் உயிருண்ட எந்தை * பிரான் அவன் பெருகுமிடம் **
வெள்ளியான் கரியான் * மணிநிற வண்ணன் என்றெண்ணி * நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1020 நின்ற மாமருது இற்று வீழ * நடந்த நின்மலன் நேமியான் *
என்றும் வானவர் கை தொழும் * இணைத் தாமரை அடி எம்பிரான் **
கன்றி மாரி பொழிந்திடக் * கடிது ஆநிரைக்கு இடர் நீக்குவான் *
சென்று குன்றம் எடுத்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1021 * பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு * வென்ற பரஞ்சுடர் *
கோத்து அங்கு ஆயர் தம் பாடியில் * குரவை பிணைந்த எம் கோவலன் **
ஏத்துவார் தம் மனத்துள்ளான் * இடவெந்தை மேவிய எம்பிரான் *
தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1022 வண்கையான் அவுணர்க்கு நாயகன் * வேள்வியில் சென்று மாணியாய் *
மண் கையால் இரந்தான் * மராமரம் ஏழும் எய்த வலத்தினான் **
எண் கையான் இமயத்துள்ளான் * இருஞ்சோலை மேவிய எம்பிரான் *
திண் கைம்மா துயர் தீர்த்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1023 எண்திசைகளும் ஏழுலகமும் வாங்கிப் * பொன் வயிற்றில் பெய்து *
பண்டு ஓர் ஆலிலைப் பள்ளி கொண்டவன் * பால்மதிக்கு இடர் தீர்த்தவன் **
ஒண்திறல் அவுணன் உரத்து உகிர் வைத்தவன் * ஒள் எயிற்றொடு *
திண்திறல் அரி ஆயவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1024 பாரும் நீர் எரி காற்றினோடு * ஆகாசமும் இவை ஆயினான் *
பேரும் ஆயிரம் பேச நின்ற * பிறப்பிலி பெருகுமிடம் **
காரும் வார்பனி நீள்விசும்பிடைச் * சோரு[20] மாமுகில் தோய் தர *
சேரும் வார்பொழில் சூழ் * எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1025 அம்பரம் அனல் கால் நிலம் * சலமாகி நின்ற அமரர் கோன் *
வம்புலாம் அலர் மேல் * மலிமட மங்கை தன் கொழுநன் அவன் **
கொம்பின் அன்ன இடை மடக் குறமாதர் * நீளிதணந்தொறும் *
செம்புனம்மவை காவல் கொள் * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1026 * பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் * சொல்லி நின்று பின்னரும் *

---
[20] சேரு

பேசுவார் தமை உய்ய வாங்கிப் * பிறப்பு அறுக்கும் பிரானிடம் **
வாச மாமலர் நாறுவார் * பொழில்சூழ் தரும் உலகுக்கெல்லாம் *
தேசமாய்த் திகழும் மலை * திருவேங்கடம் அடை நெஞ்சமே!

1027 * செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடத்து உறை செல்வனை *
மங்கையர் தலைவன் கலிகன்றி * வண்தமிழ்ச் செஞ்சொல் மாலைகள் **
சங்கை இன்றித் தரித்து உரைக்க வல்லார்கள் * தஞ்சமதாகவே *
வங்க மாகடல் வையம் காவலராகி * வானுலகு ஆள்வரே

## பெரிய திருமொழி 1-9

1028 * தாயே தந்தை என்றும் * தாரமே கிளை மக்கள் என்றும் *
நோயே பட்டொழிந்தேன் * உன்னைக்[21] காண்பதோர் ஆசையினால் **
வேயேய் பூம்பொழில் சூழ் * விரையார் திருவேங்கடவா! *
நாயேன் வந்தடைந்தேன் * நல்கி ஆளென்னைக் கொண்டருளே

1029 மானேய் கண் மடவார் * மயக்கில் பட்டு மாநிலத்து *
நானே நானாவித * நரகம் புகும் பாவம் செய்தேன் **
தேனேய் பூம்பொழில் சூழ் * திருவேங்கட மாமலை * என்
ஆனாய்! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1030 கொன்றேன் பல்லுயிரைக் * குறிக்கோள் ஒன்றிலாமையினால் *
என்றேனும் இரந்தார்க்கு * இனிதாக உரைத்தறியேன் **
குன்றேய் மேகமதிர் * குளிர் மாமலை வேங்கடவா! *
அன்றே வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1031 குலந்தான் எத்தனையும் * பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன் *
நலந்தான் ஒன்றுமிலேன் * நல்லதோர் அறம் செய்துமிலேன் **
நிலம் தோய் நீள்முகில்[22] சேர் * நெறியார் திருவேங்கடவா! *
அலந்தேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1032 எப்பாவம் பலவும் * இவையே செய்து இளைத்தொழிந்தேன் *
துப்பா! நின்னடியே * தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் **
செப்பார் திண் வரை சூழ் * திருவேங்கட மாமலை * என்
அப்பா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1033 மண்ணாய் நீர் எரி கால் * மஞ்சுலாவும் ஆகாசமுமாம் *
புண்ணார் ஆக்கை தன்னுள் * புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன் **
விண்ணார் நீள் சிகர * விரையார் திருவேங்கடவா! *
அண்ணா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

[21] நுன்னை
[22] நீர்முகில்

1034 தெரியேன் பாலகனாய்ப் * பல தீமைகள் செய்துமிட்டேன் *
பெரியேன் ஆயின பின் * பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன் **
கரி சேர் பூம்பொழில் சூழ் * கனமாமலை வேங்கடவா! *
அரியே! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1035 நோற்றேன் பல்பிறவி * நுன்னைக் காண்பதோர் ஆசையினால் *
ஏற்றேன் இப்பிறப்பே * இடர் உற்றனன் எம்பெருமான்! **
கோல்தேன் பாய்ந்தொழுகும் * குளிர்சோலை சூழ் வேங்கடவா! *
ஆற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1036 பற்றேல் ஒன்றுமிலேன் * பாவமே செய்து பாவி ஆனேன் *
மற்றேல் ஒன்றறியேன் * மாயனே! எங்கள் மாதவனே! **
கல்தேன் பாய்ந்தொழுகும் * கமலச் சுனை வேங்கடவா! *
அற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே

1037 * கண்ணாய் ஏழுலகுக்கு * உயிராய எங்கார் வண்ணனை *
விண்ணோர் தாம் பரவும் * பொழில் வேங்கட வேதியனை **
திண்ணார் மாடங்கள் சூழ் * திருமங்கையர் கோன் கலியன் *
பண்ணார் பாடல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே

## பெரிய திருமொழி 1-10

1038 * கண்ணார் கடல் சூழ் * இலங்கைக்கு இறைவன் தன் *
திண்ணாகம் பிளக்கச் * சரம் செல உய்த்தாய்! **
விண்ணோர் தொழும் * வேங்கட மாமலை மேய *
அண்ணா! அடியேன் * இடரைக் களையாயே

1039 இலங்கைப் பதிக்கு * அன்று இறையாய[23] * அரக்கர்
குலம் கெட்டு அவர் மாளக் * கொடிப்புள் திரித்தாய்! **
விலங்கல் குடுமித் * திருவேங்கடம் மேய *
அலங்கல் துளப முடியாய்! * அருளாயே

1040 நீரார் கடலும் * நிலனும் முழுதுண்டு *
ஏர் ஆலம் இளந்தளிர் மேல் * துயில் எந்தாய்! **
சீரார் * திருவேங்கட மாமலை மேய *
ஆராவமுதே! * அடியேற்கு அருளாயே

1041 உண்டாய் உறி மேல் * நறுனெய் அமுதாக *
கொண்டாய் குறளாய் * நிலம் ஈரடியாலே **
விண்தோய் சிகரத் * திருவேங்கடம் மேய *
அண்டா! அடியேனுக்கு * அருள் புரியாயே

[23] என்று இறை

1042 தூணாய் அதனூடு * அரியாய் வந்து தோன்றி *
பேணா அவுணன் உடலம் * பிளந்திட்டாய்! **
சேணார் * திருவேங்கட மாமலை மேய *
கோணாகணையாய்! * குறிக்கொள் எனை நீயே

1043 மன்னா * இம்மனிசப் பிறவியை நீக்கி *
தன்னாகித் * தன் இன்னருள் செய்யும் தலைவன் **
மின்னார் முகில் சேர் * திருவேங்கடம் மேய *
என்னானை என்னப்பன் * என் நெஞ்சில் உளானே

1044 மானேய் மடனோக்கி திறத்து * எதிர் வந்த *
ஆனேழ் விடை செற்ற * அணிவரைத் தோளா! **
தேனே! * திருவேங்கட மாமலை மேய *
கோனே! என் மனம் * குடி கொண்டு இருந்தாயே

1045 சேயன் அணியன் * என சிந்தையுள் நின்ற
மாயன் * மணிவாள் ஒளி * வெண்தரளங்கள் **
வேய் விண்டு உதிர் * வேங்கட மாமலை மேய *
ஆயன் அடி அல்லது * மற்று அறியேனே

1046 வந்தாய் என் மனம் புகுந்தாய் * மன்னி நின்றாய்! *
நந்தாத கொழுஞ்சுடரே! * எங்கள் நம்பீ! **
சிந்தாமணியே! * திருவேங்கடம் மேய
எந்தாய்! * இனி யான் உன்னை * என்றும் விடேனே

1047 * வில்லார் மலி * வேங்கட மாமலை மேய *
மல்லார் திரள் தோள் * மணிவண்ணன் அம்மானை **
கல்லார் திரள் தோள் * கலியன் சொன்ன மாலை *
வல்லார் அவர் * வானவர் ஆகுவர் தாமே

## பெரிய திருமொழி 2-1

1048 * வானவர் தங்கள் சிந்தை போல * என் நெஞ்சமே! இனிது வந்து * மாதவ
மானவர் தங்கள் சிந்தை * அமர்ந்துறைகின்ற எந்தை **
கானவரிடு காரகில் புகை * ஓங்கு வேங்கடம் மேவி * மாண் குறள்
ஆன அந்தணற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

1049 உறவு சுற்றம் என்று ஒன்றிலா * ஒருவன் உகந்தவர் தம்மை * மண்மிசைப்
பிறவியே கெடுப்பான் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
குறவர் மாதர்களோடு * வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் * வேங்கடத்து
அறவ நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

1050 இண்டையாயின கொண்டு * தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் *

வானிடைக்
கொண்டு போயிடவும் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
வண்டு வாழ் வட வேங்கட மலை * கோயில் கொண்டு அதனோடும் * மீமிசை
அண்டம் ஆண்டிருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே

1051 பாவியாது செய்தாய் * என் நெஞ்சமே! பண்டு தொண்டு செய்தாரை *
மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் * விசும்பேற வைக்கும் எந்தை **
கோவி[24] நாயகன் கொண்டலுந்துயர் * வேங்கட மலை ஆண்டு * வானவர்
ஆவியாய் இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே

1052 பொங்கு போதியும் பிண்டியுமுடைப் * புத்தர் நோன்பியர் பள்ளியுள்ளுறை *
தங்கள் தேவரும் தாங்களுமேயாக * என் நெஞ்சம் என்பாய்! **
எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் * வேங்கடம் மேவி நின்றருள் *
அங்கணாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

1053 துவரியாடையர் மட்டையர் * சமண் தொண்டர்கள் மண்டியுண்டு பின்னரும் *
தமரும் தாங்களுமே தடிக்க * என் நெஞ்சம் என்பாய்! **
கவரி மாக்கணம் சேரும் * வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார்
விசும்பிடை *
அமர நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

1054 தருக்கினால் சமண் செய்து * சோறு தண் தயிரினால் திரளை * மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
மருட்கள் வண்டுகள் பாடும் * வேங்கடம் கோயில் கொண்டு அதனோடும் *
வானிடை
அருக்கன் மேவி நிற்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே

1055 சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் * சிலர் பேசக் கேட்டிருந்
தே * என் நெஞ்சம் என்பாய்! * எனக்கு ஒன்று சொல்லாதே **
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி * வேங்கட மலை கோயில் மேவிய *
ஆய[25] நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

1056 கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் * என் நெஞ்சம் என்பாய்! துணிந்து
கேள் *
பாடி ஆடிப் பலரும் * பணிந்தேத்திக் காண்கிலா[26] **
ஆடு தாமரையோனும் ஈசனும் * அமரர் கோனும் நின்றேத்தும் * வேங்கடத்து
ஆடு கூத்தனுக்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே

---

[24] கோவல்
[25] ஆயர்
[26] காண்கிலார்

1057 * மின்னு மாமுகில் மேவு * தண் திருவேங்கட மலை கோயில் மேவிய *
அன்னமாய் நிகழ்ந்த * அமரர் பெருமானை **
கன்னி மாமதிள் மங்கையர் கலிகன்றி * இன்தமிழால் உரைத்த * இம்
மன்னு பாடல் வல்லார்க்கு * இடமாகும் வானுலகே

## பெரிய திருமொழி 4-3-8

1275 * அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணிய * அன்று ஆழி தொட்டானை *
மின்திகழ் குடுமி வேங்கட மலை மேல் * மேவிய வேத நல்விளக்கை **
தென்திசைத் திலதம் அனையவர் நாங்கைச் * செம்பொன்செய் கோயிலின்
உள்ளே *
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை * வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே

## பெரிய திருமொழி 4-7-5

1312 * வேடார் திருவேங்கடம் * மேய விளக்கே! *
நாடார் புகழ் * வேதியர் மன்னிய நாங்கூர் **
சேடார் பொழில் சூழ் * திருவெள்ளக்குளத்தாய்! *
பாடா வருவேன் * வினை ஆயின பாற்றே

## பெரிய திருமொழி 5-3-4

1371 வாம்பரியுக மன்னர் தம் உயிர் செக * ஐவர்கட்கு அரசளித்த *
காம்பினார் திருவேங்கடப் பொருப்ப! * நின் காதலை அருள் எனக்கு **
மாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில் * வாயது துவர்ப்பெய்த *
தீம்பலங்கனித் தேனது நுகர் * திருவெள்ளறை நின்றானே!

## பெரிய திருமொழி 5-5-1

1388 * வெருவாதாள் வாய் வெருவி * வேங்கடமே!
வேங்கடமே! என்கின்றாளால் *
மருவாளால் என் குடங்கால் * வாள் நெடுங்கண்
துயில் மறந்தாள் ** வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன் *
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சிந்திக்கேனே?

## பெரிய திருமொழி 5-6-7

1404 * சிந்தனையைத் தவ நெறியைத் * திருமாலை * பிரியாது
வந்து எனது[27] மனத்து இருந்த * வடமலையை ** வரிவண்டார்
கொந்தணைந்த பொழில் கோவல் * உலகளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே

---

[27] என்

## பெரிய திருமொழி 6-8-1

1518 * மான் கொண்ட தோல் * மார்வின் மாணியாய் * மாவலி மண்
தான் கொண்டு * தாளால் அளந்த பெருமானை **
தேன் கொண்ட சாரல் * திருவேங்கடத்தானை *
நான் சென்று நாடி * நறையூரில் கண்டேனே

## பெரிய திருமொழி 7-3-5

1572 ஆங்கு வெந்நரகத்து அழுந்தும் போது *
அஞ்சேல் என்று அடியேனை அங்கே வந்து
தாங்கு * தாமரை அன்ன பொன்னார் அடி
எம்பிரானை * உம்பர்க்கு அணியாய் நின்ற **
வேங்கடத்து அரியைப் பரிகீறியை *
வெண்ணெய் உண்டு உரலினிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை * தேனை நன்பாலினை அன்றி *
என் மனம் சிந்தை செய்யாதே

## பெரிய திருமொழி 7-10-3

1640 எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை * வாசவார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனை * பங்கில் வைத்து உகந்தான் தன்னைப் * பான்மையைப் பனிமா
மதியம் தவழ் **
மங்குலைச் சுடரை வடமாமலை உச்சியை * நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை * பகலைச் சென்று நாடிக் * கண்ணமங்கையுள் கண்டு
கொண்டேனே

## பெரிய திருமொழி 8-2-3

1660 * அருவி சோர் வேங்கடம் * நீர்மலை என்று வாய்
வெருவினாள் * மெய்யம் வினவி இருக்கின்றாள் **
பெருகு சீர்க் * கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள் * உள் மெலிந்தாள் * இது என் கொலோ?

## பெரிய திருமொழி 9-7-4

1811 பண்ணுலா மென்மொழிப் பாவைமார் * பணை முலை அணைதும் நாம் என்று *
எண்ணுவார் எண்ணம் அதொழித்து * நீ பிழைத்து உயக் கருதினாயேல் **
விண்ணுளார் விண்ணின் மீது இயன்ற * வேங்கடத்துளார் * வளங்கொள்
முந்நீர்
வண்ணனார் வல்லவாழ் * சொல்லுமாவல்லையாய் மருவு நெஞ்சே!

## பெரிய திருமொழி 9-9-9

1836 * வலம்புரி ஆழியனை * வரையார் திரள் தோளன் தன்னை *
புலம் புரிநூல் அவனைப் * பொழில் வேங்கட வேதியனை **
சிலம்பியல் ஆறுடைய * திருமாலிருஞ்சோலை நின்ற *
நலந்திகழ் நாரணனை * நணுகுங்கொல்? என் நன்னுதலே

### பெரிய திருமொழி 10-1-2

1849 * பொன்னை மாமணியை * அணி ஆர்ந்ததோர்
மின்னை * வேங்கடத்து உச்சியில் * கண்டு போய் **
என்னை ஆளுடை ஈசனை * எம்பிரான்
தன்னை * யாம் சென்று காண்டும் * தண்காவிலே

### பெரிய திருமொழி 10-10-5

1946 * சொல்லாய் பைங்கிளியே! *
சுடர் ஆழி வலன் உயர்த்த **
மல்லார் தோள் வடவேங்கடவனை வர *
சொல்லாய் பைங்கிளியே!

### பெரிய திருமொழி 11-3-7

1978 கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் * கைவளைகள்
என்னோ கழன்ற? * இவை என்ன மாயங்கள்? **
பெண்ணானோம் * பெண்மையோம் நிற்க * அவன் மேய
அண்ணல் மலையும் * அரங்கமும் பாடோமே

### பெரிய திருமொழி 11-5-10

2001 * கள்ளத்தால் மாவலியை * மூவடி மண் கொண்டு அளந்தான் *
வெள்ளத்தான் வேங்கடத்தான் * என்பரால் காணேடீ! **
வெள்ளத்தான் * வேங்கடத்தானேலும் * கலிகன்றி
உள்ளத்தின் உள்ளே * உளன் கண்டாய் சாழலே!

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## திருக்குறுந்தாண்டகம்

### திருக்குறுந்தாண்டகம் 7

2038 இம்மையை மறுமை தன்னை * எமக்கு வீடாகி நின்ற *
மெய்ம்மையை விரிந்த சோலை * வியன் திருவரங்கம் மேய **
செம்மையைக் கருமை தன்னைத் * திருமலை ஒருமையானை *
தன்மையை நினைவார் என்தன் * தலை மிசை மன்னுவாரே

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## திருநெடுந்தாண்டகம்

### திருநெடுந்தாண்டகம் 8

2059 * நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்! *

நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய் * ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்! *
உள்ளுவார் உள்ளத்தாய்! ** உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா! *
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! * பேராது என் நெஞ்சின் உள்ளாய்! *
பெருமான்! உன் திருவடியே பேணினேனே

### திருநெடுந்தாண்டகம் 9

2060 வங்கத்தால் மாமணி வந்து உந்து முந்நீர்
மல்லையாய்! * மதிள் கச்சி ஊராய்! பேராய்! *
கொங்கத்தார்[28] வளங்கொன்றை அலங்கல் மார்வன் *
குல வரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான் **
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்! *
பனி வரையின் உச்சியாய்! பவள வண்ணா! *
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி *
ஏழையேன் இங்ஙனமே உழி தருகேனே!

### திருநெடுந்தாண்டகம் 16

2067 * கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்! என்றும் *
கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே! என்றும் *
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும் *
வடதிருவேங்கடம் மேய மைந்தா! என்றும் **
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே! என்றும் *
விரிபொழில் சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும் *
துன்று குழல் கருநிறத்து என் துணையே! என்றும் *
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே!

---

## பொய்கையாழ்வார் அருளிச் செய்த
## முதல் திருவந்தாதி

### முதல் திருவந்தாதி 26

2107 எழுவார் விடை கொள்வார் * ஈன் துழாயானை *
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவார் **
வினைச் சுடரை நந்துவிக்கும் * வேங்கடமே * வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை

### முதல் திருவந்தாதி 37

2118 வகையறு நுண்கேள்வி * வாய்வார்கள் * நாளும்

[28] கொங்குத்தார்

புகை விளக்கும் பூம்புனலும் ஏந்தி ** - திசை திசையின்
வேதியர்கள் * சென்று இறைஞ்சும் வேங்கடமே * வெண்சங்கம்
ஊதிய வாய் மால் உகந்த ஊர்

### முதல் திருவந்தாதி 38

2119 ஊரும் வரி அரவம் * ஒண் குறவர் மால் யானை *
பேர எறிந்த பெருமணியை ** - கார் உடைய
மின் என்று * புற்றடையும் வேங்கடமே * மேல சுரர்
எம்மெனு[29] மாலதிடம்

### முதல் திருவந்தாதி 39

2120 இடந்தது பூமி * எடுத்தது குன்றம் *
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச ** - கிடந்ததுவும்
நீரோத மாகடலே * நின்றதுவும் வேங்கடமே *
பேரோத வண்ணர் பெரிது

### முதல் திருவந்தாதி 40

2121 பெருவில் பகழிக் * குறவர் கைச் செந்தீ *
வெருவிப் புனம் துறந்த வேழம் ** - இருவிசும்பில்
மீன் வீழக் * கண்டஞ்சும் வேங்கடமே * மேல் அசுரர்
கோன் வீழக் கண்டு உகந்தான் குன்று

### முதல் திருவந்தாதி 68

2149 உணர்வாரார் உன் பெருமை? * ஊழி தோறூழி *
உணர்வாரார் உன் உருவம் தன்னை? ** - உணர்வாரார்
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! * வேங்கடத்தாய்! * நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால்?

### முதல் திருவந்தாதி 76

2157 வழி நின்று * நின்னைத் தொழுவார் * வழுவா
மொழி நின்ற * மூர்த்தியரே ஆவர் ** - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண் கொடுக்கும் * மண் அளந்த
சீரான் திருவேங்கடம்

### முதல் திருவந்தாதி 77

2158 வேங்கடமும் * விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் * நீள்கோவல் பொன்னகரும் ** - நான்கு இடத்தும்
நின்றான் இருந்தான் * கிடந்தான் நடந்தானே *
என்றால் கெடுமாம் இடர்

[29] எம்மென்ற / என்னென்ற / என்னென்னும்

### முதல் திருவந்தாதி 82

2163 படையாரும் வாட்கண்ணார் * பாரசி நாள் * பைம்பூந்
தொடையலோடு * ஏந்திய தூபம் ** - இடை இடையில்
மீன் மாய * மாசூணும் வேங்கடமே * மேலொரு நாள்
மான் மாய எய்தான் வரை

### முதல் திருவந்தாதி 99

2180 * உளன் கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
வெள்ளத்தின் உள்ளானும் * வேங்கடத்து மேயானும் *
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்

---

## பூதத்தாழ்வார் அருளிச் செய்த
## இரண்டாம் திருவந்தாதி

### இரண்டாம் திருவந்தாதி 25

2206 சென்றது இலங்கை மேல் * செவ்வே தன் சீற்றத்தால் *
கொன்றது இராவணனைக் கூறுங்கால் ** - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் * வேங்கடமே * விண்ணவர் தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து

### இரண்டாம் திருவந்தாதி 28

2209 மனத்துள்ளான் வேங்கடத்தான் * மாகடலான் * மற்றும்
நினைப்பரிய * நீள் அரங்கத்து உள்ளான் ** - எனைப்பலரும்
தேவாதி தேவன் * எனப்படுவான் * முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன்

### இரண்டாம் திருவந்தாதி 33

2214 துணிந்தது சிந்தை * துழாய் அலங்கல் * அங்கம்
அணிந்தவன் பேர் * உள்ளத்துப் பல்கால் ** - பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் * விறல் வேங்கடவனையே *
வாய்திறங்கள் சொல்லும் வகை

### இரண்டாம் திருவந்தாதி 45

2226 உளதென்று இறுமாவார் * உண்டில்லை என்று *
தளர்தல் அதன் அருகும் சாரார் ** - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பயின்று

### இரண்டாம் திருவந்தாதி 46

2227 பயின்றது அரங்கம் திருக்கோட்டி * பன்னாள்

பயின்றதுவும் * வேங்கடமே பன்னாள் ** - பயின்றது
அணிதிகழும் சோலை * அணிநீர்மலையே *
மணி திகழும் வண்தடக்கை மால்

### இரண்டாம் திருவந்தாதி 53

2234 நெறியார் குழற்கற்றை * முன் நின்று பின் தாழ்ந்து *
அறியாது இளங்கிரி என்றெண்ணி ** - பிறியாது
பூங்கொடிக்கள் வைகும் * பொருபுனல் குன்று என்றும் *
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு

### இரண்டாம் திருவந்தாதி 54

2235 வெற்பென்று இருஞ்சோலை * வேங்கடம் என்று இவ்விரண்டும் *
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் ** - நிற்பென்று
உளங்கோயில் * உள்ளம் வைத்து உள்ளினேன் * வெள்ளத்து
இளங்கோயில் கைவிடேல் என்று

### இரண்டாம் திருவந்தாதி 72

2253 போதறிந்து வானரங்கள் * பூஞ்சுனை புக்கு * ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டு ஏத்தும் போது ** உள்ளம்! - போது
மணி வேங்கடவன் * மலர் அடிக்கே செல்ல *
அணி வேங்கடவன் பேராய்ந்து

### இரண்டாம் திருவந்தாதி 75

2256 பெருகு மத வேழம் * மாப்பிடிக்கு முன் நின்று *
இருகண் இளமூங்கில் வாங்கி ** - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் * திருவேங்கடம் கண்டீர் *
வான் கலந்த வண்ணன் வரை

---

## பேயாழ்வார் அருளிச் செய்த
## மூன்றாம் திருவந்தாதி

### மூன்றாம் திருவந்தாதி 14

2295 மாற்பால் மனம் சுழிப்ப * மங்கையர் தோள் கை விட்டு *
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் ** - நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பணிந்து

### மூன்றாம் திருவந்தாதி 26

2307 சிறந்த என் சிந்தையும் * செங்கண் அரவும் *
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும் ** - உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் * வேளுக்கைப் பாடியுமே *
தாம் கடவார் தண்துழாயார்

## மூன்றாம் திருவந்தாதி 30

2311 சேர்ந்த திருமால் * கடல் குடந்தை வேங்கடம் *
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும்4 ** - வாய்ந்த
மறை பாடகம் அனந்தன் * வண்துழாய்க் கண்ணி *
இறை பாடியாய இவை

## மூன்றாம் திருவந்தாதி 32

2313 பாற்கடலும் வேங்கடமும் * பாம்பும் பனிவிசும்பும் *
நூற்கடலும் நுண்ணூல தாமரை மேல் ** - பாற்பட்டு
இருந்தார் மனமும் * இடமாகக் கொண்டான் *
குருந்தொசித்த கோபாலகன்

## மூன்றாம் திருவந்தாதி 39

2320 இறையாய் நிலனாகி * எண்திசையும் தானாய் *
மறையாய் மறைப் பொருளாய் வானாய் ** - பிறை வாய்ந்த
வெள்ளத்தருவி * விளங்கொலி நீர் வேங்கடத்தான் *
உள்ளத்தின் உள்ளே உளன்

## மூன்றாம் திருவந்தாதி 40

2321 உளன் கண்டாய் நல்நெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
விண்ணொடுங்கக் கோடுயரும் * வீங்கருவி வேங்கடத்தான் *
மண்ணொடுங்கத் தான் அளந்த மன்

## மூன்றாம் திருவந்தாதி 45

2326 புரிந்து மத வேழம் * மாப்பிடியோடு ஊடி *
திரிந்து சினத்தால் பொருது ** - விரிந்த சீர்
வெண்கோட்டு * முத்துதிர்க்கும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை

## மூன்றாம் திருவந்தாதி 58

2339 தெளிந்த சிலாதலத்தின் * மேல் இருந்த மந்தி *
அளிந்த கடுவனையே நோக்கி ** - விளங்கிய
வெண்மதியம் * தாவென்னும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு

## மூன்றாம் திருவந்தாதி 61

2342 * பண்டெல்லாம் வேங்கடம் * பாற்கடல் வைகுந்தம் *
கொண்டங்கு உறைவார்க்குக் கோயில் போல் ** - வண்டு
வளங்கிளரும் நீள்சோலை * வண்பூங்கடிகை *
இளங்குமரன் தன் விண்ணகர்

### மூன்றாம் திருவந்தாதி 62

2343 விண்ணகரம் வெஃகா * விரிதிரைநீர் வேங்கடம் *
மண்ணகரம் மாமாட வேளுக்கை ** - மண்ணகத்த
தென் குடந்தை * தேனார் திருவரங்கம் தென்கோட்டி *
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு

### மூன்றாம் திருவந்தாதி 63

2344 தாழ் சடையும் நீள்முடியும் * ஒண்மழுவும் சக்கரமும் *
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் ** - சூழும்
திரண்டருவி பாயும் * திருமலை மேல் எந்தைக்கு *
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

### மூன்றாம் திருவந்தாதி 68

2349 பார்த்த கடுவன் * சுனை நீர் நிழல் கண்டு *
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து ** - கார்த்த
களங்கனிக்குக் * கை நீட்டும் வேங்கடமே * மேல் நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு

### மூன்றாம் திருவந்தாதி 69

2350 வெற்பென்று * வேங்கடம் பாடும் * வியந்துழாய்
கற்பென்று சூடும் * கருங்குழல் மேல் ** - மல் பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த * நீள் கடல் நீராடுவான் *
பூண்ட நாள் எல்லாம் புகும்

### மூன்றாம் திருவந்தாதி 70

2351 புகுமதத்தால் * வாய் பூசிக் கீழ் தாழ்ந்து * அருவி
உகு மதத்தால் * கால் கழுவிக் கையால் ** - மிகு மதத் தேன்
விண்ட மலர் கொண்டு * விறல் வேங்கடவனையே *
கண்டு வணங்கும் களிறு

### மூன்றாம் திருவந்தாதி 71

2352 களிறு முகில் குத்தக் * கை எடுத்தோடி *
ஒளிறு மருப்பொசிகை யாளி - பிளிறி
விழ ** கொன்று நின்றதிரும் * வேங்கடமே * மேல் நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று

### மூன்றாம் திருவந்தாதி 72

2353 குன்று ஒன்றினாய * குறமகளிர் கோல்வளைக் கை *
சென்று விளையாடும் தீங்கழை போய் ** - வென்று
விளங்கு மதி கோள் விடுக்கும் * வேங்கடமே * மேலை
இளங்குமரர் கோமான் இடம்

**மூன்றாம் திருவந்தாதி 73**

2354 இடம் வலம் ஏழ் பூண்ட * இரவித் தேர் ஓட்டி *
வடமுக வேங்கடத்து மன்னும் ** - குடம் நயந்த
கூத்தனாய் நின்றான் * குரைகழலே கூறுவதே *
நாத்தன்னால் உள்ள நலம்

**மூன்றாம் திருவந்தாதி 75**

2356 சார்ந்தகடு தேய்ப்பத் * தடாவிய கோட்டுச்சி வாய் *
ஊர்ந்தியங்கும் வெண்மதியின் ஒண்முயலை ** - சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் * திருமலையே * ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு

**மூன்றாம் திருவந்தாதி 89**

2370 முடிந்த பொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் * பைந்தினைகள்வித்த ** - தடிந்தெழுந்த
வேய்ங்கழை போய் * விண் திறக்கும் வேங்கடமே * மேலொரு நாள்
தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு

---

## திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
## நான்முகன் திருவந்தாதி

**நான்முகன் திருவந்தாதி 34**

2415 குறிப்பு எனக்குக் * கோட்டியூர் மேயானை ஏத்த *
குறிப்பு எனக்கு நன்மை பயக்க ** - வெறுப்பனோ?
வேங்கடத்து மேயானை * மெய்வினை[30] நோய் எய்தாமல் *
தான் கடத்தும் தன்மையான் தாள்

**நான்முகன் திருவந்தாதி 39**

2420 அழைப்பன் * திருவேங்கடத்தானைக் காண *
இழைப்பன் * திருக்கூடல் கூட ** - மழைப்பேர்
அருவி * மணி வரன்றி[31] வந்திழிய * யானை
வெருவி அரவொடுங்கும் வெற்பு

**நான்முகன் திருவந்தாதி 40**

2421 வெற்பென்று * வேங்கடம் பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் * நின்று நினைக்கின்றேன் ** - கற்கின்ற
நூல் வலையில் பட்டிருந்த * நூலாட்டி கேள்வனார் *
கால் வலையில் பட்டிருந்தேன் காண்

---

[30] வெவ்வினை
[31] வரண்டி

**நான்முகன் திருவந்தாதி 41**

2422 காணல் உறுகின்றேன் * கல்லருவி முத்துதிர *
ஓண விழவில் ஒலி அதிர ** - பேணி
வருவேங்கடவா! * என் உள்ளம் புகுந்தாய் *
திருவேங்கடம் அதனைச் சென்று

**நான்முகன் திருவந்தாதி 42**

2423 சென்று வணங்குமினோ * சேணுயர் வேங்கடத்தை *
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் ** - என்றும்
கடிக்கமல நான்முகனும் * கண் மூன்றத்தானும் *
அடிக்கமலம் இட்டு ஏத்தும் அங்கு

**நான்முகன் திருவந்தாதி 43**

2424 மங்குல் தோய் சென்னி * வடவேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் * காப்பணிவான் ** - திங்கள்
சடையேற வைத்தானும் * தாமரை மேலானும் *
குடையேறத் தாம் குவித்துக் கொண்டு

**நான்முகன் திருவந்தாதி 44**

2425 கொண்டு குடங்கால் * மேல் வைத்த குழவியாய் *
தண்ட அரக்கன் தலை தாளால் - பண்டெண்ணி **
போம் குமரன் நிற்கும் * பொழில் வேங்கட மலைக்கே *
போம் குமரருள்ளீர்! புரிந்து

**நான்முகன் திருவந்தாதி 45**

2426 புரிந்து மலர் இட்டுப் * புண்டரீகப் பாதம் *
பரிந்து படுகாடு நிற்ப ** - தெரிந்தெங்கும்
தான் ஓங்கி நிற்கின்றான் * தண்ணருவி வேங்கடமே *
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு

**நான்முகன் திருவந்தாதி 46**

2427 வைப்பன் மணி விளக்கா * மாமதியை * மாலுக்கென்று
எப்பொழுதும் * கை நீட்டும் யானையை ** - எப்பாடும்
வேடு வளைக்கக் * குறவர் வில் எடுக்கும் வேங்கடமே *
நாடு வளைத்தாடுது[32] மேல் நன்று

**நான்முகன் திருவந்தாதி 47**

2428 நன்மணி வண்ணனூர் * ஆளியும் கோளரியும் *
பொன்மணியும் முத்தமும் பூமரமும் ** - பன்மணி நீ
ரோடு பொருதுருளும் * கானமும் வானரமும் *
வேடுமுடை வேங்கடம்

[32] வளைத்தாடு

### நான்முகன் திருவந்தாதி 48

2429 வேங்கடமே * விண்ணோர் தொழுவதுவும் * மெய்ம்மையால்
வேங்கடமே * மெய்வினை நோய் தீர்ப்பதுவும் ** - வேங்கடமே
தானவரை வீழத் * தன் ஆழிப் படை தொட்டு *
வானவரைக் காப்பான் மலை

### நான்முகன் திருவந்தாதி 90

2471 வீற்றிருந்து * விண்ணாள வேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பல்மலர்கள் ** - மேல் திருந்த
வாழ்வார் * வருமதி பார்த்து அன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வாய் இருப்பார் தமர்

---

## நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவிருத்தம்

### திருவிருத்தம் 8

2485 காண்கின்றனகளும் * கேட்கின்றனகளும் காணில் * இந்நாள்
பாண்குன்ற நாடர் * பயில்கின்றன ** இதெல்லாம் அறிந்தோம்
மாண்குன்றம் ஏந்தித் தண் மாமலை வேங்கடத்து உம்பர் நம்பும் *
சேண்குன்றம் சென்று * பொருள் படைப்பான் கற்றதிண்ணனவே

### திருவிருத்தம் 10

2487 மாயோன் வட திருவேங்கட நாட * வல்லிக் கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் * கேட்கின்றிலீர் உரையீர் ** நுமது
வாயோ? அது அன்றி வல்வினையேனும் கிளியும் எள்கும்
ஆயோ? * அடும் தொண்டையோ? * அறையோ! இது அறிவரிதே

### திருவிருத்தம் 15

2492 கயலோ நும கண்கள்? என்று * களிறு வினவி நிற்றீர் *
அயலோர் அறியிலும் ஈதென்ன வார்த்தை? ** கடல் கவர்ந்த
புயலோடு உலாம் கொண்டல் வண்ணன் புன வேங்கடத்து எம்மொடும் *
பயலோவிலீர் * கொல்லை காக்கின்ற நாளும் பல பலவே

### திருவிருத்தம் 31

2508 இசைமின்கள் தூது என்று இசைத்தால் இசையிலம் * என் தலை மேல்
அசைமின்கள் என்றால் அசையுங்கொலாம்? ** அம்பொன் மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங்கடத்துவன் தாள் * சிமய
மிசை * மின் மிளிரிய போவான் வழிக் கொண்ட மேகங்களே!

### திருவிருத்தம் 50

2527 ஒண்ணுதல் மாமை * ஒளி பயவாமை * விரைந்து நந்தேர்

நண்ணுதல் வேண்டும் * வலவ! கடாகின்று ** தேன் நவின்ற
விண் முதல் நாயகன் நீள்முடி வெண்முத்த வாசிகைத்தாய் *
மண் முதல் சேர்வுற்று * அருவி செய்யா நிற்கும் மாமலைக்கே

### திருவிருத்தம் 60

2537 * முலையோ முழு முற்றும் போந்தில * மொய்பூம் குழல் குறிய
கலையோ அரையில்லை * நாவோ குழறும் ** கடல் மண்ணெல்லாம்
விலையோ என மிளிரும் கண் இவள் பரமே? * பெருமான்
மலையோ * திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே

### திருவிருத்தம் 67

2544 காவியும் நீலமும் * வேலும் கயலும் பல பல என்று *
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு ** அசுரைச்[33] செற்ற
மாவியம் புள் வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம் சேர் *
தூவியம் பேடை அன்னாள் * கண்களாய துணை மலரே

### திருவிருத்தம் 81

2558 உருகின்ற கன்மங்கள் * மேலன ஓர்ப்பிலராய் * இவளைப்
பெருகின்ற தாயர் * மெய் நொந்து பெறார் கொல்? ** துழாய் குழல் வாய்த்
துறுகின்றிலர் தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர் *
இருகின்றதால் இவள் ஆகம் * மெல்லாவி எரி கொள்ளவே

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## சிறிய திருமடல்

### சிறிய திருமடல் 69

* சீரார் திருவேங்கடமே திருக்கோவ
லூரே *

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமடல்

### பெரிய திருமடல் 6

மழைக் கூந்தல்
தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும் *

### பெரிய திருமடல் 124

[33] அசுரர்ச்

மின்னி மழை தவழும் வேங்கடத்து எம் வித்தகனை *

---

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி

### திருவாய்மொழி 1-8-3

2754 கண்ணாவான் என்றும் *
மண்ணோர் விண்ணோர்க்கு **
தண்ணார் வேங்கட *
விண்ணோர் வெற்பனே

### திருவாய்மொழி 2-6-9

2848 எந்தாய்! தண்திருவேங்கடத்துள் நின்றாய்! * இலங்கை செற்றாய்! * மராமரம்
பைந்தாள் ஏழுருவ * ஒரு வாளி கோத்த வில்லா! **
கொந்தார் தண்ணந்துழாயினாய்! அமுதே! * உன்னை என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா! * வானேறே! * இனி எங்குப் போகின்றதே?

### திருவாய்மொழி 2-6-10

2849 போகின்ற காலங்கள் போய காலங்கள் * போகு காலங்கள் * தாய் தந்தை உயிர்
ஆகின்றாய்! * உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ? **
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் * நாதனே! பரமா! * தண்வேங்கடம்
மேகின்றாய்! * தண்துழாய் விரை நாறு கண்ணியனே!

### திருவாய்மொழி 2-7-11

2861 பற்பநாபன் உயர்வற உயரும் * பெருந்திறலோன் *
எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு * எனக்கே தன்னைத் தந்த
கற்பகம் ** என் அமுதம் கார் முகில் போலும் * வேங்கட நல்
வெற்பன் * விசும்போர் பிரான் * எந்தை தாமோதரனே

### திருவாய்மொழி 3-3

2919 * ஒழிவில் காலம் எல்லாம் * உடனாய் மன்னி *
வழுவிலா * அடிமை செய்ய வேண்டும் நாம் **
தெழிகுரல் அருவித் * திருவேங்கடத்து *
எழில் கொள் சோதி * எந்தை தந்தை தந்தைக்கே

2920 எந்தை தந்தை தந்தை * தந்தை தந்தைக்கும்
முந்தை * வானவர் * வானவர் கோனொடும் **
சிந்து பூ மகிழும் * திருவேங்கடத்து *
அந்தமில் புகழ்க் * கார் எழில் அண்ணலே

2921 அண்ணல் மாயன் * அணிகொள் செந்தாமரைக்
கண்ணன் * செங்கனி வாய்க் * கருமாணிக்கம் **
தெண்ணிறைச்[34] சுனை நீர்த் * திருவேங்கடத்து *
எண்ணில் தொல் புகழ் * வானவர் ஈசனே

2922 ஈசன் வானவர்க்கு என்பன் * என்றால் * அது
தேசமோ * திருவேங்கடத்தானுக்கு **
நீசனேன் * நிறை ஒன்றுமிலேன் * என் கண்
பாசம் வைத்த * பரஞ்சுடர்ச் சோதிக்கே

2923 சோதியாகி * எல்லா உலகும் தொழும் *
ஆதி மூர்த்தி என்றால் * அளவாகுமோ? **
வேதியர் * முழு வேதத்தமுதத்தை *
தீதில் சீர்த் * திருவேங்கடத்தானையே

2924 வேங்கடங்கள் * மெய்ம்மேல் வினை முற்றவும் *
தாங்கள் தங்கட்கு * நல்லனவே செய்வார் **
வேங்கடத்துறைவார்க்கு * நம என்ன
லாம் கடமை * அது சுமந்தார்கட்கே

2925 சுமந்து மாமலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
அமர்ந்து வானவர் * வானவர் கோனொடும் **
நமன்றெழும் * திருவேங்கடம் நங்கட்கு *
சமன் கொள் வீடு தரும் * தடம் குன்றமே

2926 * குன்றம் ஏந்திக் * குளிர் மழை காத்தவன் *
அன்று ஞாலம் * அளந்த பிரான் ** பரன்
சென்று சேர் * திருவேங்கட மாமலை *
ஒன்றுமே தொழ * நம் வினை ஓயுமே

2927 ஓயும் மூப்புப் * பிறப்பு இறப்புப் பிணி *
வீயுமாறு செய்வான் * திருவேங்கடத்து
ஆயன் ** நாள் மலராம் * அடித் தாமரை *
வாயுள்ளும் மனத்துள்ளும் * வைப்பார்கட்கே

2928 வைத்த நாள் வரை * எல்லை குறுகிச் சென்று *
எய்த்திளைப்பதன் * முன்னம் அடைமினோ **
பைத்த பாம்பணையான் * திருவேங்கடம் *
மொய்த்த சோலை * மொய்பூந்தடம் தாழ்வரே

[34] தெண்ணிறச்

2929 * தாள் பரப்பி * மண் தாவிய ஈசனை *
நீள் பொழில் குருகூர்ச் * சடகோபன் சொல் **
கேழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
வாழ்வர் வாழ்வெய்தி * ஞாலம் புகழவே

## திருவாய்மொழி 3-5-8

2948 வார்புனல் அந்தணருவி * வடதிருவேங்கடத்து எந்தை *
பேர் பல சொல்லிப் பிதற்றிப் * பித்தர் என்றே பிறர் கூற **
ஊர் பல புக்கும் புகாதும் * உலகோர் சிரிக்க நின்றாடி *
ஆர்வம் பெருகிக் குனிப்பார் * அமரர் தொழப்படுவாரே

## திருவாய்மொழி 3-9-1

2985 * சொன்னால் விரோதம் இது * ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ *
என் நாவில் இன்கவி * யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன் **
தென்னாதெனா என்று * வண்டு முரல் திருவேங்கடத்து *
என்னானை என்னப்பன் * எம்பெருமான் உளனாகவே

## திருவாய்மொழி 4-5-11

3061 * மாரி மாறாத தண்ணம்மலை * வேங்கடத்து அண்ணலை *
வாரி மாறாத பைம்பூம்பொழில் சூழ் * குருகூர் நகர் **
காரிமாறன் சடகோபன் * சொல் ஆயிரத்து இப்பத்தால் *
வேரி மாறாத பூமேல் இருப்பாள் * வினை தீர்க்குமே

## திருவாய்மொழி 6-6

3282 * மாலுக்கு * வையம் அளந்த மணாளற்கு *
நீலக் கரு நிற * மேக நியாயற்கு **
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு * என் கொங்கலர்
ஏலக் குழலி * இழந்தது சங்கே

3283 சங்கு வில் வாள் தண்டு * சக்கரக் கையற்கு *
செங்கனிவாய்ச் * செய்ய தாமரைக் கண்ணற்கு **
கொங்கலர் தண்ணந்துழாய் * முடியானுக்கு * என்
மங்கை இழந்தது * மாமை நிறமே

3284 நிறம் கரியானுக்கு * நீடுலகு உண்ட *
திறம் கிளர் வாய்ச் * சிறு கள்வன் அவற்கு[35] **
கறங்கிய சக்கரக் * கையவனுக்கு * என்
பிறங்கிரும் கூந்தல் * இழந்தது பீடே

3285 பீடுடை நான்முகனைப் * படைத்தானுக்கு *

[35] கள்வர் அவர்க்கு

மாடுடை வையம் * அளந்த மணாளற்கு **
நாடுடை மன்னர்க்குத் * தூது செல்[36] நம்பிக்கு * என்
பாடுடை அல்குல் * இழந்தது பண்பே

3286 பண்புடை வேதம் * பயந்த பரனுக்கு *
மண் புரை வையம் * இடந்த வராகற்கு **
தெண்புனல் பள்ளி * எம் தேவ பிரானுக்கு * என்
கண்புனை கோதை * இழந்தது கற்பே

3287 கற்பகக் காவன * நற்பல தோளற்கு *
பொற் சுடர்க் குன்றன்ன * பூந்தண் முடியற்கு **
நற்பல தாமரை * நாள் மலர்க் கையற்கு * என்
விற்புருவக் கொடி * தோற்றது மெய்யே

3288 மெய்யமர் பல்கலன் * நன்கு அணிந்தானுக்கு *
பையரவின் அணைப் * பள்ளியினானுக்கு **
கையொடு கால் செய்ய * கண்ண பிரானுக்கு* என்
தையல் இழந்தது * தன்னுடைச் சாயே

3289 சாயக் குருந்தம் * ஒசித்த தமியற்கு *
மாயச் சகடம் * உதைத்த மணாளற்கு **
பேயைப் பிணம் படப் * பாலுண் பிரானுக்கு * என்
வாசக் குழலி * இழந்தது மாண்பே

3290 மாண்பமை கோலத்து * எம் மாயக் குறளற்கு *
சேண் சுடர்க் குன்றன்ன * செஞ்சுடர் மூர்த்திக்கு **
காண் பெரும் தோற்றத்து * எம் காகுத்த நம்பிக்கு * என்
பூண்புனை மென்முலை * தோற்றது பொற்பே

3291 பொற்பமை நீள் முடிப் * பூந்தண் துழாயற்கு *
மற்பொரு தோளுடை * மாயப் பிரானுக்கு **
நிற்பன பல்லுருவாய் * நிற்குமாயற்கு * என்
கற்புடையாட்டி * இழந்தது கட்டே

3292 * கட்டெழில் சோலை * நல் வேங்கடவாணனை *
கட்டெழில் தென்குருகூர்ச் * சடகோபன் சொல் **
கட்டெழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
கட்டெழில் வானவர் * போகம் உண்பாரே

---
[36] செய்

## திருவாய்மொழி 6-10

3326 * உலகமுண்ட பெருவாயா! * உலப்பில் கீர்த்தி அம்மானே! *
நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி! * நெடியாய்! அடியேன் ஆருயிரே! **
திலதம் உலகுக்காய் நின்ற * திருவேங்கடத்து எம்பெருமானே! *
குலதொல் அடியேன் உன பாதம் * கூடுமாறு கூறாயே

3327 கூறாய் நீறாய் நிலனாகிக் * கொடு வல்லசுரர் குலம் எல்லாம் *
சீறா எறியும் திருநேமி வலவா! * தெய்வக் கோமானே! **
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் * திருவேங்கடத்தானே! *
ஆறா அன்பில் அடியேன் * உன் அடி சேர் வண்ணம் அருளாயே

3328 வண்ணம் அருள் கொள் அணிமேக வண்ணா! * மாய அம்மானே! *
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! * இமையோர் அதிபதியே! **
தெண்ணல் அருவி மணி பொன் முத்தலைக்கும் * திருவேங்கடத்தானே! *
அண்ணலே! உன் அடி சேர * அடியேற்கு[37] ஆவா என்னாயே

3329 ஆவா! என்னாது உலகத்தை அலைக்கும் * அசுரர் வாணாள் மேல் *
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா! * திருமாமகள் கேள்வா!
தேவா! ** சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
பூவார் கழல்கள் அருவினையேன் * பொருந்துமாறு புணராயே

3330 புணரா நின்ற மரம் ஏழ் * அன்றெய்த ஒரு வில் வலவாவோ! *
புணரேய் நின்ற மரம் இரண்டின் * நடுவே போன முதல்வாவோ! **
திணரார் மேகம் எனக் களிறு சேரும் * திருவேங்கடத்தானே! *
திணரார் சார்ங்கத்து உன பாதம் * சேர்வதடியேன் என்னாளே?

3331 எந்நாளே? நாம் மண் அளந்த * இணைத் தாமரைகள் காண்பதற்கென்று *
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி * இறைஞ்சி இனம் இனமாய் **
மெய் நா மனத்தால் வழிபாடு செய்யும் * திருவேங்கடத்தானே! *
மெய் நான் எய்தி எந்நாள் * உன் அடிக்கண்[38] அடியேன் மேவுவதே?

3332 அடியேன் மேவி அமர்கின்ற அமுதே! * இமையோர் அதிபதியே! *
கொடியாவடு புள்ளுடையானே! * கோலக் கனிவாய்ப் பெருமானே! **
செடியார் வினைகள் தீர் மருந்தே! * திருவேங்கடத்து எம்பெருமானே! *
நொடியார் பொழுதும் உன பாதம் * காண நோலாதாற்றேனே

3333 நோலாதாற்றேன் உன பாதம் * காண என்று நுண்ணுணர்வின் *
நீலார் கண்டத்து அம்மானும் * நிறை நான்முகனும் இந்திரனும் **
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும் * திருவேங்கடத்தானே! *
மாலாய் மயக்கி அடியேன் பால் * வந்தாய் போலே வாராயே

---

[37] அடியோர்க்கு

[38] அடிக்கள்

3334 வந்தாய் போலே வாராதாய் * வாராதாய் போல் வருவானே! *
செந்தாமரைக்கண் செங்கனிவாய் * நால்தோள் அமுதே! எனதுயிரே **
சிந்தாமணிகள் பகர் அல்லைப் பகல் செய் * திருவேங்கடத்தானே! *
அந்தோ! அடியேன் உன பாதம் * அகலகில்லேன் இறையுமே

3335 * அகலகில்லேன் இறையும் என்று * அலர்மேல் மங்கை உறை மார்பா! *
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! * என்னை ஆள்வானே! **
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
புகல் ஒன்றில்லா அடியேன் * உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே

3336 * அடிக் கீழ் அமர்ந்து புகுந்து * அடியீர்! வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும் *
படிக் கேழில்லாப் பெருமானைப் * பழனக் குருகூர்ச் சடகோபன் **
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் * திருவேங்கடத்துக்கு இவை பத்தும் *
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து * பெரிய வானுள் நிலாவுவரே

## திருவாய்மொழி 8-2-1

3458 * நங்கள் வரிவளையாயங்காளோ! * நம்முடை ஏதலர் முன்பு நாணி *
நுங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் * நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன் **
சங்கம் சரிந்தன சாயிழந்தேன் * தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந்தேன் *
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன் * வேங்கடவாணனை வேண்டிச் சென்றே

## திருவாய்மொழி 9-3-8

3586 இன்றிப் போக * இருவினையும் கெடுத்து *
ஒன்றி ஆக்கை புகாமை * உய்யக் கொள்வான் **
நின்ற வேங்கடம் * நீள் நிலத்து உள்ளது *
சென்று தேவர்கள் * கை தொழுவார்களே

## திருவாய்மொழி 10-5-6

3716 * மேயான் வேங்கடம் *
காயா மலர் வண்ணன் **
பேயார் முலை உண்ட *
வாயான் மாதவனே

## திருவாய்மொழி 10-7-8

3740 * திருமாலிருஞ்சோலை மலையே * திருப்பாற்கடலே என்தலையே *
திருமால் வைகுந்தமே * தண் திருவேங்கடமே எனதுடலே **
அருமா மாயத்து எனதுயிரே * மனமே வாக்கே கருமமே *
ஒருமா நொடியும் பிரியான் * என் ஊழி முதல்வன் ஒருவனே

### திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த
## இராமானுச நூற்றந்தாதி

### இராமானுச நூற்றந்தாதி 76

* நின்றவண் கீர்த்தியும் நீள் புனலும் * நிறை வேங்கடப் பொற்
குன்றமும் * வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும் **
உன்தனக்கு எத்தனை இன்பம் தரும் உன் இணை மலர்த் தாள் *
என்தனக்கும் அது * இராமானுச! இவை ஈந்தருளே

### இராமானுச நூற்றந்தாதி 106

* இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் * மாயனுக்கென்பர் நல்லோர் ** அவை தம்மொடும்[39] வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து * இன்றவன் வந்து
இருப்பிடம் * என்தன் இதயத்துள்ளே தனக்கின்புறவே

---

### மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
## திருவாய்மொழி நூற்றந்தாதி

### திருவாய்மொழி நூற்றந்தாதி 23

* ஒழிவிலாக் காலம் * உடனாகி மன்னி *
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு ** - எழு சிகர
வேங்கடத்துப் பாரித்த * மிக்க நலம் சேர் மாறன் *
பூங்கழலை நெஞ்சே! புகழ்

### திருவாய்மொழி நூற்றந்தாதி 60

* உலகுய்ய மால் நின்ற * உயர் வேங்கடத்தே *
அலர் மகளை முன்னிட்டு அவன் தன் - மலர் அடியே **
வன் சரணாய்ச் சேர்ந்த * மகிழ் மாறன் தாள் இணையே *
உன் சரணாய் நெஞ்சமே! உள்

---

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

[39] தன்னொடும்

## திருவேங்கடப் பாசுரங்கள்

பெரியாழ்வார் திருமொழி பாசுரங்கள் = 7
நாச்சியார் திருமொழி பாசுரங்கள் = 16
பெருமாள் திருமொழி பாசுரங்கள் = 11
திருச்சந்த விருத்தம் பாசுரங்கள் = 3
அமலனாதிபிரான் பாசுரங்கள் = 2
பெரிய திருமொழி பாசுரங்கள் = 55
திருக்குறுந்தாண்டகம் பாசுரங்கள் = 1
திருநெடுந்தாண்டகம் பாசுரங்கள் = 3
முதல் திருவந்தாதி பாசுரங்கள் = 10
இரண்டாம் திருவந்தாதி பாசுரங்கள் = 9
மூன்றாம் திருவந்தாதி பாசுரங்கள் = 19
நான்முகன் திருவந்தாதி பாசுரங்கள் = 12
திருவிருத்தம் பாசுரங்கள் = 8
சிறிய திருமடல் பாசுரங்கள் = 1
பெரிய திருமடல் பாசுரங்கள் = 1
திருவாய்மொழி பாசுரங்கள் = 44

**ஆழ்வார்கள் பாசுரங்கள் = 202**

---